## 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த

# முரசொலி செல்வம் - முன்னணியினர் மறைவுக்கு இரங்கல் - தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, டிச. 23-

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த முரசொலி செல்வம் மற்றும் முன்னணியினர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

அவை வருமாறு:-

● கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு கழகக் கொள்கைகளை பரப்பியவரும் - 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த எழுத்தாளரும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவரும் - தலைசிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளருமான திரு. முரசொலி செல்வம்.

தந்தை பெரியார் வழியில் பகுத்தறிவு - சுயமரியாதைக் கொள்கை உணர்வு மிக்கவராகவும், திராவிடக் கொள்கை உணர்வுகொண்ட தேசிய அரசியல்வாதியாகவும் திகழ்ந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும் - ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் திரு. கோ.சண்முகநாதன்

மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும் - உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும் - கழக சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான கும்முடிப்பூண்டி கி.வேணு,

தி.மு.க. தலைமை நிலையச் செயலாளரும் - சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான கு.க.செல்வம்,

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளரும் - விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான நா.புகழேந்தி.

தலைமைக் கழக அலுவலக துணை மேலாளர் என். ஜெயக்குமார்,

கழக மூத்த முன்னோடியும் - இலக்கிய அணி மாநில இணைச் செயலாளருமான கயல்தினகரன்,

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அவைத் தலைவரும் - நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான த. வேணுகோபால்,

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைவர் வே. சுப்புராமன்,

கழக இலக்கிய அணித் தலைவர் புலவர் இந்திரகுமாரி,

தொ.மு.ச. பேரவை இணைப் பொதுச் செயலாளர் மா. பேச்சிமுத்து,

மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் கழக மூத்த வழக்கறிஞர் அ.அ.ஜின்னா,

ஈரோடு வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோபி. வி.பி.சண்முகசுந்தரம்,

கழக சட்ட திட்டக் திருத்தக்குழு உறுப்பினர் - கோவை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கோவை இரா. மோகன்,

சென்னை மாநகராட்சி முன்னாள் ஆளுங்கட்சித் தலைவர் சி.வி. மலையன்

தலைமைக் கழகப் பேச்சாளர் சீரணி சண்முகம்,

கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் கோவை செல்வராஜ்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கழக மூத்த முன்னோடியும் - சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான திருப்பெரும்புதூர் ஏ.கோதண்டம்,

முன்னாள் அமைச்சரும் - கழக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவருமான க.சுந்தரம்,

பெரம்பலூர் மாவட்டம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் - மொழிபோர்த் தியாகியுமான எஸ். மணி,

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் - முன்னாள் நகர் மன்றத் தலைவருமான கோபால் (எ) மு. பழனிவேலன்,

தமிழ் உணர்வும் தளராத போர்க்குணமும் கொண்டவர் திராவிட இயக்கச் சிந்தனைவுடன் தீவிரமாகச் செயல்பட்டவர் கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்,

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கழக மூத்த முன்னோடி மன்னப்பன்,

முன்னாள் சைதை தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் து. புருஷோத்தமன்,

நாகை மாவட்டம், நாகை நகர முன்னாள் செயலாளர் போலீஸ் அ. பன்னீர்,

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.மருதுகணேஷ் அவர்களின் தாயார் திருமதி. பார்வதி நாராயணசாமி,

சென்னை தெற்கு மாவட்டம், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான ஆலப்பாக்கம் கு. சண்முகம்,

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், போளூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் - மாவட்ட அவைத் தலைவருமான வழக்கறிஞர் இராஜேந்திரன்,

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகரக் கழக மூத்த முன்னோடி மிசாகுமரன்

சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் கே.எஸ். மணிமுத்து,

காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் செயலாளரும் - ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான கண்டோன்மெண்ட் சி. சண்முகம்,

புதுச்சேரி மாநில முன்னாள் முதலமைச்சரும் - மாநில முன்னாள் அமைப்பாளர் டி.இராமச்சந்திரன்,

சென்னை தென்மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான திருமதி ஷீபா வாசு,

புதுச்சேரி மாநில கழக மூத்த முன்னோடியும் - தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவருமான வழக்கறிஞர் ர. பலராமன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கழகக் கொள்கைகளை பரப்பியவர் முரசொலி செல்வம்!**



**கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு கழகக் கொள்கைகளை பரப்பியவரும் - 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த எழுத்தாளரும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவரும் - தலைசிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளருமான திரு. முரசொலி செல்வம் - என்று இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**




ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மரில் நேற்று முன்தினம் (21.12.2024) நடைபெற்ற ஜி.எஸ்.டி. கவுன்சிலின் 55ஆவது குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பாக நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார். தமிழ்நாடு அரசின் வணிகவரி மற்றும் பதிவுத் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவநீத் மற்றும் வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், ஃபெஞ்சல் புயல் நிவாரண நிதியாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், வழங்கினார்.

### வரலாற்றிலேயே இல்லாத வகையில்

# தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக ‘காலை உணவுத் திட்டம்’!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி பேச்சு!

திருவெறும்பூர், டிச.23-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் 47 வது பிறந்த நாளை விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது

மேலும் இதன் ஒரு பகுதியாக திருச்சி தெற்கு மாவட்டம் , திருவெறும்பூர் பகுதி கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது, இந்த பொதுக்கூட்டத்திற்கு திருவெறும்பூர் பகுதி கழகச் செயலாளர் சிவக்குமார் தலைமை வகித்தார் மேலும் இந்த பொதுக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் தமிழக



பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி,மாநகர செயலாளர் மதிவாணன் மற்றும் திமுக மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி, தலைமை கழக பேச்சாளர் காசிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மேலும் இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், மூக்கன், லிலாவேலு, துனைமேயர் திவ்யா, பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் சோமகுணநிதி, விஜயபாலன், அருண்குமார், கண்ணதாசன் மற்றும் மாவட்ட, நகர பகுதி, கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொது மக்கள் என பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் உரையாற்றியதாவது, நாம் உழைத்து ஒன்றிய அரசிற்கு ஒரு ரூபாய் கொடுக்கிறோம் என்றால் அவர்கள் நமக்கு திருப்பிக் கொடுப்பது வெறும் 29 பைசா தான் என்று எடுத்துரைத்தார் இன்று யாருடைய பிறந்த நாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என்றால் குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டுவரக்கூடிய ஒவ்வொரு திட்டத்திற்கெல்லாம் அவருடைய கரத்தை வலுப்படுத்தும் விதமாக நிர்வாக ரீதியாக தொடர்ந்து அந்த பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு முதல்வர் கொண்டுவரக்கூடிய கட்டணமில்லா பேருந்து மகளிர் உரிமை தொகை , செல்வமகள் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டமாக இருந்தாலும் சரி மேலும் இதற்கு ஒரு படி மேலே கூற வேண்டும் என்றால் வரலாற்றிலேயே இல்லாத வகையில் முதல் முறையாக காலை உணவு திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 20 லட்சத்து 73 ஆயிரத்து 536 குழந்தைகள் உணவு உண்டு பள்ளிக்கு செல்கிறார்கள் என்றால் அதற்கு காரணமாக இருக்கக்கூடிய தமிழக முதல்வரின் திட்டங்களை கையாள நிர்வாக ரீதியாக கையாளக்கூடிய ஒருவர் யார் என்றால் அது துணை முதல்வர் தான் என்றும் ஒரு உழைப்பாளியாக தமிழகம் முழுவதும் சுழன்று வருகிறார் என்றால் அது துணை முதல்வர் தான் என்றும் அப்படிப்பட்டவரின் பிறந்த நாளை தான் இன்று நாம் கொண்டாடி வருகிறோம் என்றும் மேலும் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு 13 மாநகராட்சி உள்ளடக்கிய திருவெறும்பூர் தொகுதிகள் நேரடியாக மக்களை சந்தித்து அவர்களிடம் மனுக்களை பெற்றோம் அதில் வீட்டு மனை பட்டா கலைஞர் உரிமைத்தொகை ஆகியவைதான் அதிகமாக இருந்ததாகவும் அனைத்து மனுக்களையும் முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கி விட்டதாகவும் அந்த மனுக்களை முதல்வர் யாரிடம் ஒப்படைப்பார் என்றால் துணை முதல்வரிடம் தான் மேலும் துணை முதல்வர் எங்கு சென்றாலும் இதுவரை கலைஞர் உரிமைத்தொகை தமிழக முழுவதும் ஒரு கோடியே 55 லட்சம் பேர் விண்ணப்பித்து உள்ளதாகவும் தற்பொழுது ஒரு கோடியே 16 லட்சம் பேருக்கு வழங்கிய வருவதாகவும் மேலும் அனைவருக்கும் விரைவில் வழங்கப்படும் என உறுதி அளித்து வருகிறார் என்றும் கூறினார் மேலும் மக்களுக்கு மழையால் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பொழுது ரெயின் கோட்டை அணிந்து தமிழக முதல்வரும் அவருக்கு உறுதுணையாக துணை முதல்வரும் வெள்ளத்தை நேரடியாக பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறி வருவதாகவும் சென்னையில் மட்டும் தான் துணை முதல்வர் மழை வெள்ளத்தை பார்வையிட்டாரா என்றால் இல்லை கடலூர் விழுப்புரம் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு சென்றும் நேரில் மக்களை சந்தித்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியவர் தான் துணை முதல்வர் என்றும், ஒன்றியத்தில் ஆளும் பாஜக அரசாணை நாம் உழைத்து ஒரு ரூபாய் கொடுப்பதாகவும் ஆனால் அவர்கள் நமக்கு திருப்பி வெறும் 29 பைசா மட்டுமே கொடுப்பதாகவும் மீதமுள்ள தொகையை வேறு மாநிலங்களுக்கு செலவிடுவதாகவும் எடுத்துரைத்தார் .



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்கோட்டை வருவாய் கிராமத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், துணை மேயர் எம்.லியாகத் அலி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர்.அ.அக்பர்அலி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா, குன்றாண்டார்கோவில் ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.பாண்டிச்செல்வி கே.ஆர்.என்.போஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




இனமான பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் டவுன் சந்திப் பிள்ளையார் கோவில் அருகில் பேராசிரியர் பெருந்தகையார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.நிகழ்வில் அப்துல் கையூம், பூ.சுப்பிரமணியன், அன்டன் செல்லதுரை, நமச்சிவாயம், சுந்தர்ராஜ், வேங்கை வெங்கடேஷ், ஜாகீர், அலிப் மீரான் இனியன், ஜாகிர் உசேன், நாதன், சுப்பையா, பாஸ்கரன், லெனின், அவதார் ஷாஜகான், ஸ்டார் அப்துல், எஸ்.எஸ். முத்து, பத்மா, மணிகண்டன், ராஜேஸ்வரி, ஆனி ரேக்லண்ட் உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.